<u>செய்திக்குறிப்பு</u>

**<u>எஸ்.எஸ்.எல்.சி மாணவர்களுக்கு 'தினத்தந்தி' கல்விநிதி வழங்கும் விழா.</u>**
**<u>பொருளாதாரத்தில் பின்தங்கிய 10 மாணவ-மாணவிகளுக்கு</u>**
**<u>தலா ரூ.10 ஆயிரம் வழங்கப்பட்டது</u>**

கல்விப்பணியில் பல புரட்சிகளை செய்து மாணவர்களுக்கு வழிகாட்டி வரும் 'தினத்தந்தி' சார்பில் மாணவர்களுக்கு ஊக்கம் அளிக்க வேண்டும் என்பதற்காக எஸ்.எஸ்.எல்.சி மற்றும் பிளஸ்-2 பொதுத் தேர்வுகளில் மாநில அளவில் முதல் மதிப்பெண் பெறும் மாணவ-மாணவிகளுக்கு ரொக்கப்பரிசு வழங்கப்பட்டு வந்தது.

மேலும், மாணவர்கள் பரிசுத்திட்டத்தின்படி மாவட்டம் தோறும் எஸ்.எஸ்.எல்.சி பொதுத் தேர்வில் முதல் 3 இடங்களை பிடித்த மாணவ-மாணவிகள் அனைவருக்கும் ரொக்கப்பரிசு மற்றும் 'தினத்தந்தி' யின் பாராட்டு சான்றிதழ் வழங் கப்பட்டது. இந்நிலையில் கடந்த 2014-15ம் கல்வி ஆண்டு முதல் பொருளாதாரத் தில் மிகவும் பின்தங்கிய மாணவர்கள் மேல்படிப்பை தொடர்வதற்கு வசதியாக 'தினத்தந்தி' கல்வி நிதி திட்டத்தை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறது. இத் திட்டத்தின்கீழ் மாவட்டத்திற்கு 10 மாணவ-மாணவிகள் வீதம் தமிழகம் மற்றும் புதுச்சேரியில் உள்ள 34 மாவட்டங்களை சேர்ந்த மொத்தம் 340 மாணவ, மாணவி கள் தேர்வு செய்யப்பட்டு அவர்களுக்கு தலா ரூ.10 ஆயிரம் வீதம் ரூ.34 லட்சம் கல்வி நிதியாக வழங்கப்படுகிறது.

2016-2017ம் கல்வி ஆண்டில் அதிக மதிப்பெண்களை பெற்ற பொருளாதாரத் தில் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ள மாணவ-மாணவிகளுக்கு 'தினத்தந்தி' கல்வி நிதி வழங்கும் நிகழ்ச்சி மாவட்டம் தோறும் நடத்தப்பட்டு வருகிறது. அதன்படி காரைக்கால் மாவட்டத்தில் கடந்த 2016-2017ம் கல்வி ஆண்டில் 'தினத்தந்தி' கல்வி நிதி பெற தகுதி பெற்றுள்ள கீழ்க்கண்ட 10 மாணவ-மாணவி களுக்கு 'தினத்தந்தி' கல்வி நிதி வழங்கும் விழா, இன்று (24.01.2018) மாலை 3.00 மணியளவில் காரைக்காலில் உள்ள காரைக்கால் அம்மையார் மேல்நிலை பள்ளி யில் வெகு விமரிசையாக நடைபெற்றது.

மாவட்ட கலெக்டர் திரு.ஆர்.கேசவன் அவர்கள் கலந்து கொண்டு மாணவ-மாணவிகளுக்கு 'தினத்தந்தி' கல்வி நிதிக்கான வரைவோலைகளை வழங்கி சிறப்புரையாற்றினார். ~~கல்வித்துறை துணை இயக்குநர் ஜி.சுப்ரமணியன்~~, மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் அ.அல்லி, காரைக்கால் அம்மையார் மேல்நிலைப் பள்ளி மேலாளர் பி.ஸ்டாலின்மணி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். முன்ன தாக விழாவிற்கு வருகை தந்த அனைவரையும் 'தினத்தந்தி' புதுச்சேரி பதிப்பு மேலாளர் ஆர்.சதீஷ்குமார் வரவேற்க, முடிவில் காரைக்கால் அம்மையார் மேல்நிலைப்பள்ளி முதல்வர் எஸ்.ராஜேஷ் பொன்னையா நன்றி கூறினார்.

நிகழ்ச்சியில் அரசு உதவி பெறும் பள்ளிகளின் பெற்றோர் சங்க பொறுப் பாளர்களும், பள்ளி யின் பெற்றோர்-ஆசிரியர் சங்க பொறுப்பாளர்களும், மாணவ-மாணவிகளும், ஆசிரியைகளும் கலந்து கொண்டனர்.

நன்றி! வணக்கம்!